**இலங்கை ரோல்போல் சங்கம் - 2022**

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை ரோல்போல் சங்கத்தின் (''சங்கம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் வருமான செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் ஒன்றை வெளியிடவில்லை. எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், நிதி நிலைமைக் கூற்று , வருமானச் செலவுக்கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான விடயங்களை மாற்று வழிகளில் எனக்கு உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாமல் இருந்தது. இந்த விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத தொகைகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்று , வருமானச் செலவுக்கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் ஏதேனும் சீராக்கங்கள் தேவைப்படுகின்றனவா என்பதை எனக்கு தீர்மானிப்பதற்கு முடியாமல் இருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். இருப்பினும், எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள எனக்கு முடியாமல் இருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்தின் மொத்த பொறுப்புகள் அதன் மொத்த சொத்துக்களை விட ரூபா 5,031,855 ஆல் விஞ்சப்பட்டிருந்தன. அத்துடன் மீளாய்வாண்டில் சங்கத்தின் மொத்த சொத்துக்களுடன் ஒப்பிடுகையில், திரண்ட நிதியத்தின் மறை மீதி 109 மடங்காக இருந்தது. இது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருப்பதையும் அது சங்கத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதையும் குறிக்கின்றது. எனினும், நிறைவேற்றுக்குழு இந்த நிலைமையை கருத்திற்கொண்டு பரிகார நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மற்றும் நிதிக்கூற்றுக்களில் அதை வெளிப்படுத்துவதற்குமான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | 2023 இல் அனைத்து கடன் கொடுப்பனவுகளையும் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சங்கத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை குறைப்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 109,685 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 35,085 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 144,770 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவுகள் ரூபா 337,230 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 482,000 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

3. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கம் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டை தயாரிக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டில் சங்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டை மதிப்பீடு செய்ய முடியவில்லை. | நாம் அடுத்த ஆண்டிற்கான பாதீட்டை தயாரித்து நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று, அடுத்த ஆண்டில் கணக்காய்விற்கு சமர்பிப்போம். | குறிப்பிட்ட நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னர் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

3.2 செயல் நடவடிக்கைத்திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டு சங்கங்களின் உத்தரவுகளின் 7(xii) ஆம் பிரிவின் பிரகாரம், ஆண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று அனுப்பப்பட்டிருக்கவில்லை. | நாம் அடுத்த ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை சமர்பிப்போம். | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தாமதமின்றி பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |

3.3 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டு சங்கங்களின் உத்தரவுகளின் 7(xi) ஆம் பிரிவின் பிரகாரம், சங்கங்கத்தினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | நாம் அடுத்த ஆண்டில் கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்து சமர்பிப்போம். | கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிறைவேற்றுக் குழுவின் அங்கீகாரததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |

3.4 முகாமைத்துவச் செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்தினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்படவில்லை. | நாம் அடுத்த ஆண்டில் நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரித்து சமர்பிப்போம். | நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |